ஸ்கூட்டரின்மீது நம்முடைய விற்பனை வரி 4 சதவீதம், ஆனால், பாண்டிச்சேரியில் 3 சதவீதம். மோட்டார் சைக்கிள்மீது நம்முடைய விற்பனை வரி 4 சதவீதம், பாண்டிச்சேரியில் 3 சதவீதம். Jeep, Van, sales tax 8 percent, whereas it is only 4 percent in Pondicherry. மோட்டார் கார் மீது நாம் 5 சதவீதம் விதிக்கிறோம். அவர்கள் 3 சதவீதம் விதிக்கிறார்கள். திரீ வீலர்ஸ், நாம் 15 சதவீதம்: அவர்கள் 3 சதவீதம். சேசிஸ், நாம் 6 சதவீதம், அங்கே 3 சதவீதம். லாரி மற்றும் பஸ்ஸஸ் 15 சதவீதம் இங்கே, அங்கே 4 சதவீதம். இந்த விற்பனை இடைவெளியை அவர்கள் ஏமாற்றுவதற்காக பயன்படுத்துகிற காரணத்தினாலேதான், ஏமாற்றாமல் தடுப்பதற்காக, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்தச் சட்டமே தவிர, யாரையும், யார் மீதும் வன்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இல்லை. இயக்கூர்திகளின் நுழைவின்மீதான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்பு 1990 மார்ச் திங்கள் வரையில் 55 இலட்சம் ரூபாய் வரி வசூலிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதிலே அரசியல் சட்ட சிக்கல் இல்லை. இதிலே யாரையும் தண்டிக்கிற நோக்கம் இல்லை. இது வரி ஏய்ப்பவர்களைத் தடுக்க வேண்டும் என்கிற முயற்சியே தவிர, அதற்கும் வக்காலத்து வாங்குவது எந்தவகையிலும் நியாயமில்லை. எனவே, இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசியபோது பத்தி 5, 6 பற்றி, தெளிவாக இல்லையென்று மட்டுந்தான் குறிப்பிட்டேன். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சி மன்றச் செயலர் அவர்கள் அவசரச் சட்டத்திலே பேசும்போது மிகவும் அவசரப்பட்டு ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். 5-ம், 6-ம் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இங்கே நானும் சட்டம் பயின்றவன் என்ற முறையிலே சொல்கிறேன். 'The Government May by notification appoint' என்றுதான் இரண்டிலும் வருகிறது. இனிமேல் அவர்களை நியமிப்பதற்கு அதிகாரம் வழங்குகின்ற ஒரு பத்தியாக இருக்கிறதே தவிர, அந்த அதிகாரத்தின்படி இந்த வணிக வரி விதிப்புக்குழுவும், மேல்முறையீட்டுக் குழுவும் அமைக்கப்பட்டுவிட்டதாக எந்த இடத்திலும் இல்லை. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சி மன்றச் செயலர் அவர்கள், அப்படி நியமிக்கப்பட்டிருக்கின்ற அவர்கள், யார் யார் என்பதை தெளிவாக்கவேண்டுமென்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

Thiru L. GANESAN : (Parliamentary Secretary to Chief Minister): It is only by notification. It will be done hereafter.